NUS National University of Singapore
**Source:** *Tamil Murasu*, p7
**Date:** 3 September 2024

# தமிழ்ப் பற்றைத் தூண்டிவிடும் ‘சொற்கனல்’

**ரவி சிங்காரம்**

பல்கலைக்கழக மாணவர்கள் மோதும் ‘சொற்கனல்’ விவாதக் களம், இரண்டாவது ஆண்டாக நடைபெறவுள்ளது .

இதன் இறுதிச் சுற்று, தமிழ் இளையர் விழாவின் ஓர் அங்கமாக, சிங்கைத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில், ஞாயிற்றுக் கிழமை (செப்டம்பர் 8) காலை 9.30 முதல் 12.30 மணி வரை உமறுப் புலவர் தமிழ்மொழி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சென்ற ஆண்டின் சொற்கனல், மூன்று பல்கலைக்கழகங்கள் ஒரே தலைப்பில் ஒரே மேடையில் மோதும் முக்கோண விவாதமாக நடைபெற்றது. அதில் சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக்கழகம் (என்யுஎஸ்) வெற்றி பெற்றிருந்தது.

இவ்வாண்டு சற்று வித்தியாசமாக, முன்னோட்டச் சுற்றுகளும் நடைபெற்றன. ஆகஸ்ட் 24ஆம் தேதி உமறுப் புலவர் தமிழ்மொழி நிலையத்தில் நடைபெற்ற அச்சுற்றுகளில் மாணவ அணிகள் சுழல் முறையில் ஒன்றோடொன்று மோதின.

“பல பேச்சாளர்களும் கடைசியாக உயர்நிலைப் பள்ளியில்தான் விவாதித்திருந்தனர்; நெடுநாள் தமிழில் புழங்கவில்லை. அதனால், முன்னோட்டச் சுற்றுகள்வழி அவர்கள் தயாராகக் கூடுதல் வாய்ப்பு வழங்கினோம்,” என்றார் ‘சொற்கனல் 2024’ன் தலைவர் ந ல கோபிகா.

முன்னோட்டச் சுற்றுகளில், ஒவ்வோர் அணியும் இரு தனித்தனி விவாதங்களில் போட்டியிட வேண்டியிருந்தது.

தயாரித்துப் பேசும் சுற்றில், இரு வாரங்களுக்குமுன் கொடுக்கப்பட்ட தலைப்பில் நான்கு பேச்சாளர்கள் ஆளுக்கு இரு நிமிடங்கள் பேசினர். பின்பு, ஐந்தே நிமிடத் தயாரிப்பில் உடனடிச் சுற்றில் குழுவாக ஐந்து நிமிடங்கள் பேசினர்.

‘பரபரப்பான வாழ்க்கைமுறை இன்றைய இளையர்களுக்கு அவசியமானதே’, ‘இன்றைய வாழ்க்கை முறையில், செயற்கை நுண்ணறிவு வகித்துள்ள பங்கு போதுமானதே’, ‘இன்றைய காலத்தில் ஏற்படும் மாற்றங்களுக்குச் சமூக ஊடகங்களின்வழி ஏற்படும் புரட்சிகளே முக்கியக் காரணம்’ உள்ளிட்ட தலைப்புகளில் அணிகள் விவாதித்தன.


சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக்கழகம் முதல் நிலையைப் பிடித்தது. அதன் பேச்சாளர் விஷ்ணு வர்தினி கருத்தை முன்வைக்கிறார்.
**படம்: சிங்கைத் தமிழ்ச் சங்கம்**

மற்ற இரு பல்கலைக்கழகங்களையும் வென்ற என்யுஎஸ் முதல் நிலையிலும் சிங்கப்பூர் நிர்வாகக் கல்விக் கழக (எஸ்ஐஎம்) அணியை வென்ற நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் (என்டியு) இரண்டாம் நிலையிலும் இறுதிச் சுற்றுக்குத் தகுதிபெற்றன.

என்யுஎஸ், என்டியு இறுதிச் சுற்றில் ‘இன்றைய கல்வி முறை சிங்கப்பூர் மாணவர்களை எதிர்காலத்திற்குப் போதுமான அளவு தயார் செய்கிறது’ என்ற தலைப்பில் விவாதிக்கவுள்ளன. புள்ளிவிவரங்களைக் காண்பிக்க பட வில்லைகளைப் பயன்படுத்தலாம்.

இரண்டாவதான திடீர் சுற்றில், அணியின் ஒவ்வொரு பேச்சாளரும் எதிரணி பேச்சாளரோடு தனியாக மோதுவார். முதல் பரிசை வெல்லும் அணிக்கு $2,400 ரொக்கமும் இரண்டாவது பரிசை வெல்லும் அணிக்கு $1,800 ரொக்கமும் வழங்கப்படும்.

இறுதிச் சுற்றில் பல்கலைக்கழக மாணவர்களுக்கான பார்வையாளர் போட்டியும் இடம்பெறும். வெற்றியாளர்களுக்கு ரொக்கப் பற்றுச்சீட்டுகளும் வெகுமதிகளும் அளிக்கப்படும்.

இறுதிச் சுற்றைக் காண விரும்புவோர் tinyurl.com/sorkanal2024rsvp இணையத்தளத்தில் செப்டம்பர் 4க்குள் பதிவுசெய்ய வேண்டும்.

“இறுதிச் சுற்றில் எங்கள் வாதத்திலிருந்து மக்கள் ஆக்கபூர்வமான பல விஷயங்களைக் கற்றுக்கொள்வர். நல்ல தமிழின் பயன்பாட்டை ஊக்குவிக்கும் விதமாகவும் அமையும்,” என்றார் என்டியு முதல் பேச்சாளர் மகாதேவன் ஆகாஷ், 23.

“இறுதிச் சுற்றில் முதல் மூன்று பேச்சாளர்களுக்கு நான்கு நிமிடம், நான்காவது பேச்சாளருக்கு ஐந்து நிமிடம் என்பதால் கூடுதலாகத் தயார் செய்யவேண்டியுள்ளது,” என்றார் என்யுஎஸ் மூன்றாம் பேச்சாளர் அருணா கந்தசாமி, 23.

**rsingaram@sph.com.sg**

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.